*PRAVAHAM International Research Journal*
*Department of Languages*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*17 (2), 2025*

# இலங்கைக் கிறிஸ்தவக் கலையில் தேசியக் கலைபாரம்பரியத்தின் பிரதிபலிப்பு: தெரிவு செய்யப்பட்ட அங்கிலிக்கன் ஆலயங்களை மையப்படுத்திய நோக்கு

**மேரி வினிபிரிடா ச.**

கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Correspondence: winifreeda@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் வேரூன்றிய போது அதன் பண்பாட்டு அம்சங்களுடன் இணைத்து கிறிஸ்தவம் தன்னை வளப்படுத்தியதுடன் தனது பண்பாட்டு வளங்களையும் உட்புகுத்தியது. அதன் ஒரு வடிவமாகக் கலை திகழ்கிறது. கலையூடாக மறை சார்ந்த கருத்துக்கள் இலகுவில் மக்களைச் சென்றடையும் வாய்ப்புள்ளது. ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் தழைத்தோங்கியபோது வழிபாட்டு மையங்களாக விளங்கிய பிரமாண்டமான ஆலயங்களில் ஐரோப்பியக் கலை அம்சங்களும் வளமாக ஊடுருவின. அவ்வாறே ஆசியாவில் கிறிஸ்தவம் பரப்பப்பட்டபோது தோன்றிய வழிபாட்டு மையங்கள் சிறிய குடிசை அமைப்புக்களில் காணப்பட்டாலும் தொடர்ந்து, அவற்றின் வளர்ச்சிக் கட்டமானது ஐரோப்பியப் பாணியில் அமைந்த பிரமாண்டமான தூண், உயரமான கூரை என்பவற்றைக் கொண்ட ஆலயங்களாக வடிவம் பெற்றன. போர்த்துக்கேயரின் வருகையுடன் (கி.பி.1505) அதிகாரப்பூர்வமாக அறிமுகமான கிறிஸ்தவம், ஆரம்பத்தில் ஐரோப்பிய மயப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. சுதந்திரத்திற்கான கருத்துக்கள் வளர்ச்சி பெற்ற காலத்திலே தேசியம், தேசிய உணர்வு என்பன எழுச்சியடையத் தொடங்கின. இக்காலப்பகுதியில் சமயம் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்ட மறைபரப்பாளர்களும் தேசியப் பண்பாட்டு அம்சங்களினூடாக சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினர். இதில் ஒரு அம்சமாகக் கலையும் விளங்குகிறது. ஆய்வானது இலங்கைக் கிறிஸ்தவக் கலையில் தேசியப் பண்பாட்டின் பிரதிபலிப்பை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆய்வின் வரையறையைக் கருத்திற் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட இரு அங்கிலிக்கன் ஆலயங்களை மட்டுமே ஆய்வு முதன்மைப்படுத்தியுள்ளது. இலங்கையில் காலனித்துவ ஆட்சி நிலவியபோதும், அதன் பின்னரும் தோன்றிய கிறிஸ்தவ ஆலயங்களில் காணப்படும் கலைப் பிரதிபலிப்புக்களில், தேசியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்னும் விடயம் ஆழமாக உற்றுநோக்கப்படவில்லை என்னும் வினா ஆய்வுத் தேடலுக்குக் காரணமாயிற்று. இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் அங்கிலிக்கன் திரு அவை ஆலய கலையம்சங்களில் அதிகமாகத் தேசிய பண்பாட்டுடன் தொடர்புடைய கலைப் பிரதிபலிப்புக்கள் காணப்படுகின்றன என்னும் கருதுகோளை ஆய்வு மையப்படுத்தியுள்ளது. இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலய கட்டுமானங்கள், அவற்றுடன் தொடர்புடைய கலைப் பிரதிபலிப்புக்களில் தேசியப் பண்பாட்டுடன் தொடர்புடைய கலையம்சங்களின் செல்வாக்கு உண்டு என்பதை எடுத்துரைப்பது ஆய்வின் பிரதானமான நோக்கமாகும். இதற்கென நேர்காணல், கள ஆய்வு மூலம் அவதானிப்பு முறையும் இலங்கையின் தேசியக் கலையம்சங்கள் தொடர்பான தேடலுக்கு நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு ஏடுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் தொகுத்தறிவு முறை மற்றும் ஒப்பீட்டாய்வு முறையுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ கலைவடிவங்களை தேசியமயமாக்கும் கலைப் படைப்புக்களை அங்கிலிக்கன் ஆலயங்களில் அதன் கட்டட அமைப்பு, செதுக்குக் கலையம்சங்கள், ஆலய பாவனைப் பொருட்கள், ஓவியங்கள் என்பவற்றிலும் அடையாளம் காணலாம். எனவே ஆய்வானது இலங்கையின் தேசியக் கலையம்சங்களுடன் இணைந்த கிறிஸ்தவ கலைவடிவங்களையும் சமகாலம் வரையான அதன் தொடர் பராமரிப்பையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் அடையாளப்படுத்தும்.

**திறவுச் சொற்கள்**: கிறிஸ்தவ ஆலயங்கள், தேசியக் கலையம்சங்கள், அங்கிலிக்கன் ஆலயம், ஓவியங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள்

## அறிமுகம்

கிறிஸ்தவ வரலாற்றில் உரோமைய கலாபனைகளைத் தொடர்ந்து கொண்சன்ரையின் மன்னரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.313) சட்டப்பூர்வமான அங்கிகாரத்துடன் கிறிஸ்தவர்கள் தங்களது மறை செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பு கிடைத்தது. சமயச் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதால் கிறிஸ்தவ வழிபாட்டு மையங்களான ஆலய கட்டுமானங்கள் அதிகரிக்கத் தொடங்கின. தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் கிறிஸ்தவத்தைத் தழுவியமையானது பல பிரமாண்டமான ஆலயங்கள் ஐரோப்பியக் கட்டடக் கலைபாணியில் தோன்றக் காரணமாயிற்று. ஆசியாவிலும் கிறிஸ்தவம் பரப்பப்பட்டபோது, ஐரோப்பியக் கட்டடக் கலைபணியின் சாயலில் ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இலங்கைக்குச் சுதந்திரத்திற்கான கருத்துக்கள் வளர்ச்சி பெற்ற காலத்திலே தேசியம், தேசிய உணர்வு என்பன எழுச்சியடையத் தொடங்கின. இக்காலப்பகுதியில் சமயம் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்ட மறைபரப்பாளர்களும் தேசியப் பண்பாட்டு அம்சங்களினூடாக சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினர். இதில் ஒரு அம்சமாகக் கலையும் விளங்கியுள்ளது எனலாம். ஆய்வானது குருணாகலை 'கிறிஸ்து அரசர்' பேராலயம், கண்டி தூய திரித்துவக் கல்லூரியிலுள்ள சிற்றாலயம் ஆகிய இரண்டையும் மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. ஆய்விற்கான முதன்மை ஆதாரங்கள் கண்டி திரித்துவக் கல்லூரி சிற்றாலயத்திற்கு பொறுப்பாக இருந்த அனுபவம் மிக்க ஆன்மீகக் குரு அருட்பணி. டானியல் செல்டன் எமசன் அவர்களை நேரடியாகச் சந்தித்துப் பெற்ற தரவுகளும், குருணாகலை கிறிஸ்து அரசர் பேராலயத்தின் பங்குத் தந்தை சன்ஜய கமகே அவர்களிடமும் கிறிஸ்து அரசர் பேராலயத்தின் துணை நிர்வாகப் பொறுப்பில் இருந்த பொதுநிலை பணியாளர் இரஞ்சித் விக்டர் என்பவரிடமும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. ஆய்வானது இலங்கையின் கட்டடக்கலையுடன் தொடர்புடைய ஆய்வுகள், கற்கைகளை மேற்கொள்பவர்களுக்கும் பயனுடையதான சில தரவுகளை வழங்கும்.

## ஆய்வின் நோக்கம்

இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலயக் கட்டடக் கலையம்சங்களில் இலங்கையின் தேசியப் பண்பாட்டுடன் தொடர்புடைய கட்டடக் கலையம்சங்களின் செல்வாக்கு உண்டு என்பதைத் தெளிவுபடுத்துவது ஆய்வின் பிரதானமான நோக்கமாகும்.

## ஆய்வுப் பரப்பு

இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களைக் கிறிஸ்தவத்தின் திரு அவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதான, ஆவிக்குரிய, தன்னார்வ, அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட திரு அவைகள் என வகைப்படுத்தி, அவற்றிலுள்ள ஆலயங்களை ஆய்வு செய்யலாம். ஆயினும் குறித்த ஆய்வின் வரையறையைக் கருத்திற் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட இரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அங்கிலிக்கன் ஆலயங்களை மட்டுமே ஆய்வு முதன்மைப்படுத்தியுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் காலனித்துவ ஆட்சி நிலவியபோதும், அதன் பின்னரும் தோன்றிய கிறிஸ்தவ ஆலய கட்டடக் கலைப் பிரதிபலிப்புக்களில், தேசியப் பண்பாட்டின் கலைப் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன, அவற்றுக்கான பின்னணி என்ன? என்னும் விடயம் ஆழமாக உற்றுநோக்கப்படவில்லை என்னும் வினா ஆய்வுத் தேடலுக்கு வாய்ப்பளித்தது.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் அங்கிலிக்கன் திருஅவை ஆலய கட்டடக்கலையம்சங்களில் அதிகமாகத் தேசிய பண்பாட்டுடன் தொடர்புடைய கலைப் பிரதிபலிப்புக்கள் காணப்படுகின்றன.
- கிறிஸ்தவ சமயம் முரண்பாடுகள் நீக்கி, தேசிய மரபுகளையும் உள்வாங்கிப் பரப்பப்படுதல் வேண்டும் என்னும் நோக்கில் ஆலய கட்டடக்கலை சார்ந்த விடயங்களிலும் தேசிய உணர்வை உள்வாங்கியுள்ளது.
- கிறிஸ்தவம் சுதேசிகளிடையே இலகுவில் ஏற்கப்படவும் மதிக்கப்படவும் கலை ஊடகமாய் அமைந்துள்ளது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வுக்குரிய தரவுகள் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நேரடி அவதானிப்பு முறையைக் கையாண்டு பெறப்பட்டுள்ளதுடன், வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க குறித்த ஆலயங்களுக்குப் பொறுப்பான பிரதான நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இலங்கையின் தேசியக் கலையம்சங்கள் தொடர்பான தேடலுக்கு நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு ஏடுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் தொகுத்தறிவு முறை மற்றும் ஒப்பீட்டாய்வு முறையுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த சுதேச கலையம்சங்கள் கள ஆய்வு மூலம் நேரடி அவதானிப்புக்கும் உட்படுத்தப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**கிறிஸ்தவம் தேசியமயமாதல்**

கிறிஸ்தவத்தில் தேசியமயமாதல் என்பது ஒருவர் தன் இனத்தை, மொழியை, பண்பாட்டை இழக்காமல் கிறிஸ்தவனாக வாழும் நிலையைக் குறிப்பிடுகின்றது. அதாவது தேசிய பண்பாடு, கலாசாரத்தின் பெறுமதிகளை தமதாக்கி நற்செய்தியையும் கிறிஸ்தவ சடங்குகளையும் பொதுவழிபடுகளையும் தழுவி அமைத்தலைக் குறிக்கின்றது. இதனைப் பண்பாட்டு மயமாதல், சுதேச மயமாதல் அல்லது தேசிய மரபைப் பின்பற்றுதல் எனலாம். கத்தோலிக்கத் திரு அவையில் 1962ஆம் ஆண்டு தொடங்கி, 1965ஆம் ஆண்டு நிறைவடைந்த இரண்டாம் வத்திக்கான சங்கமானது, இலங்கையிலும் சுதேச பண்பாடுகளை உள்வாங்கி, தமது வழிபாடுகளை மேற்கொள்வதற்கான பாதையைத் திறந்துள்ளது. ஆரம்பக் காலங்களில் இலங்கையில் மறைபணியாற்ற வருகைதந்த ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் இலங்கை பண்பாட்டை அறியாவிட்டாலும், தென்னிந்தியாவில்

மறைபணியாற்றிய றொபட் டீ நோபிலி கிறிஸ்தவம் ஒரு குறிப்பிட்ட பிரிவு (சாதி) மக்களுக்கு மட்டும் உரிய சமயம் அல்ல என்பதை உணர்த்தும் வகையில், இந்தியாவில் உயர் குலத்தவராகிய பிராமணரும் கிறிஸ்தவத்தில் உள்வாங்கப்பட வேண்டும் எனப் பிராமணர் மத்தியில் ஒரு பிராமண குருவாக வாழ்ந்தார். (ஞானமுத்து பிலேந்திரன், 2009, 32) மேலும் இலங்கையில் மறைப்பணியாற்றிய புனித யோசேவ்வாஸ் மக்களின் பண்பாட்டு அம்சங்களை மதித்து நடந்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சியின்போது இலங்கைத் திரு அவையானது தேசியப் பண்பாடு, கலாசாரங்களைத் தீவிரமாகப் பின்பற்றி வந்தது. தமிழ், சிங்கள தேசியவாதங்கள் வளர்ச்சி பெற்று வந்தமையே இதற்குக் காரணமாகும். இதன் பின்னணியில் இலங்கைத் திரு அவை கிறிஸ்தவ மரபுகளை தேசியமயமாக்குவதில் பெரும் வளர்ச்சி கண்டது. இதற்குப் பல குருக்கள், துறவிகளும் பெரும் பங்காற்றியுள்ளனர். குறிப்பாகக் காலனியக் காலத்தில் கிறிஸ்தவ ஆலயக் கட்டடங்கள் பழைய கிரேக்க-உரோமைய கட்டடக்கலையின் பாணியை (Neo-Classical) கொண்டு காணப்பட்டன. இவை இலங்கை நாட்டின் பண்பாட்டு அடையாளத்துடன் தொடர்பற்றவையாக விளங்கின. ஆனால், ஆங்கிலேயரின் ஆட்சி ஆதிக்க எதிர்ப்பினால் ஏற்பட்ட தேசியவாதத்தின் ஆரம்பக் காலங்களில், பௌத்த சமயத்தின் வளர்ச்சியானது ஆலயக் கட்டடக்கலையில் தேசிய கலையம்சங்களின் வெளிப்பாட்டை உள்வாங்க ஏதுவாய் அமைந்தது. (Jayasinghe, Sagara. 2015, 06) இவ்வாறு கிறிஸ்தவ ஆலய கட்டட அமைப்பிலும் தேசியவாத சிந்தனைச் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இதில் குறிப்பாக அங்கிலிக்கன் திரு அவையின் ஆலய கட்டட அமைப்புக்களைச் சுதேச கலை வடிவில் வழங்குவதில் முக்கிய பங்காற்றியவர் வண. ஆயர் லக்தாஸ் டிமெல் அடிகளார் ஆவார். இவ்வாறு கிறிஸ்தவமானது சுதேச மொழி வழிபாடுகள், சுதேசக் குருக்கள், சுதேச துறவியர், சுதேச பெயர்கள் கொண்ட ஆலயங்கள், சுதேச ஆலய கட்டட அமைப்புக்கள் என அனைத்திலும் வளர்ச்சி கண்டதே கிறிஸ்தவத்தில் ‘தேசியமயமாதல்’ என்றழைக்கப்படுகின்றது.

**கட்டடக்கலை**

கட்டடக் கலையானது ஏனைய கலைகளிலிருந்துத் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளது. தொன்றுதொட்டு சமய உணர்வே கட்டடக்கலையின் தோற்றத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் உந்து சக்தியாக அமைந்திருந்தது. அதாவது, வழிபாட்டிற்கென ஆலயங்களைக் கட்டுதல் வேண்டும் என்ற ஆர்வமே கட்டடக் கலையின் தோற்றத்திற்கு அதிக உத்வேகமளித்துள்ளது. (மோசேஸ் எஸ்., 2007, 19)

கட்டடக் கலையானது கலைகளுக்கெல்லாம் முதன்மையானது. இதில் புற அமைப்பு (Exterior), அக அமைப்பு (Interior) என இரு பிரிவுகள் காணப்படும். இக் கட்டடக்கலை தொடர்பாகத் தற்போது கிடைக்கப்பெறும் மிகப் பழைய ஆக்கம், கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த உரோமானியக் கட்டடக்

கலைஞரும் பொறியியலாளருமான விட்ருவியஸ் (Vitruvius) எழுதிய 'கட்டடக்கலை தொடர்பில்' (இது இலத்தீன் மொழியில் *'De Architectura'* என்றழைக்கப்படும்) என்ற நூலில் காணப்படும் பின்வரும் குறிப்பாகும். "நல்ல கட்டடமானது அழகு, உறுதி, பயன்பாடு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மேற்படி மூன்றும், ஒன்றின் மீது ஒன்று அளவுக்கு மீறி ஆதிக்கம் செலுத்தாமல், தங்களிடையே சமநிலையையும் ஒருங்கிணைப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்." இதனடிப்படையில் ஒரு கட்டடத்துக்கு அழகு, உறுதி, பயன்பாடு என்னும் மூன்றும் அவசியமானவை. மேலும் ஒரு கட்டடம் எதற்காகக் கட்டப்படுகின்றதோ அதற்கான சமூகத் தேவைகளை அக்கட்டடம் பூர்த்தி செய்ய வேண்டும். கட்டடக் கட்டுமானப் பணியின்போது பயன்படுத்தப்படும் ஊடகங்கள், கட்டடத்தின் அமைப்பு என்பன உறுதியாகவும், பொருத்தமாகவும், நீடித்து நிலைத்திருப்பவையாகவும் அமைதல் வேண்டும். மேலும் கட்டப்படும் கட்டடமானது கலை இரசனை மிக்க வடிவமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். கட்டடக்கலையானது பல்துறைக் களமாக விளங்குவதுடன், கட்டடக் கலைஞனும் பல் துறைகளிலும் நல்ல பரிச்சயமுடையவனாயிருக்க இருத்தல் பொருத்தமுடையது. (மேரி வினிபிரிடா எஸ்., 2023, 6-7)

**குருணாகலை 'கிறிஸ்து அரசர்' பேராலயம்**

இலங்கையில் கிறிஸ்தவ ஆலய கட்டடக்கலை காலனித்துவ ஆட்சிக்குப் பின்னரான காலப்பகுதியில், குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய தேசியவாத எழுச்சியினால், சீர்திருத்தத் திரு அவையினர் மற்றும் பௌத்த மறுமலர்ச்சியாளர்கள், காலனித்துவ பின்னணியில் தோன்றிய ஆலயங்களைச் சுதேசமயமாக்கும் செயல்முறையில் ஈடுபட்டனர். குருணாகல் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள 'கிறிஸ்து அரசர்' பேராலயம் சுதேசக் கலையம்சங்களை உள்வாங்கிக் கட்டப்பட்டுள்ளது. (உரு 1) குறித்த பேராலயத்தைச் சுதேச பாணியில் கட்டுவதற்கு வழிவகுத்தவர் குருணாகல் மாவட்டத்தின் முதலாவது அங்கிலிக்கன் ஆயரான வணக்கத்திற்குரிய லக்தாஸ் டிமெல் அடிகளார் ஆவார். இதன் வடிவமைப்புக்குத் திரு. வில்சன் பீரிஸ் என்பவரின் பங்களிப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது.

1950ஆம் ஆண்டு மார்கழி 21ஆம் திகதி ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. (*Wingate* Andrew, 1998, 139) அதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயமானது கண்டி வீதியிலுள்ள ஏத்துகல்வத்தையில் மூன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமையப்பெற்றுள்ளது. பௌத்த விகாரைகள் பறைகள், மலைகளுக்கு அருகில் அமைவது போன்ற ஒரு இயற்கை அமைப்பைக் கொண்டதாக ஆலயத்தின் கட்டடத்தைக் கட்டுவதற்குத் தெரிவு செய்துள்ள இடம் அமையப்பெற்றுள்ளமையனது, தேசியக் கலைகளில் பொதுவான வெளிப்பாடான இயற்கை தன்மையை எடுத்துரைக்கும் வகையில் காணப்படுகின்றது.

ஆலயத்தின் வெளிப்புற கூரை அமைப்பானது அனுராதபுரம், பொலநறுவை மற்றும் கண்டியக் காலகட்டங்களில் காணப்பட்ட கட்டடக்கலைப்பாணியின் சாயலைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. இதன் கூரை பகுதியில் ஓடுகளைப் பயன்படுத்தியுள்ளமையானது கண்டி தலதாமாளிகையின் கட்டுமானங்களில் காணப்படும் கூரை அமைப்பை ஒத்த தன்மையில் காணப்படுகின்றது. (உரு 2) கூரையின் உச்சியில் கும்மட்டமானது தூண்களால் தாங்கிப் பிடிக்கும் வகையில் காட்சியளிக்கின்றது. கூரையமைப்பு செவ்வக வடிவில் பீடப்பகுதி வரை நீண்டு கூரிய கூரையமைப்பை கொண்டதோடு மத்திய பகுதியில் பீப்பா வடிவில் எண்கோண அமைப்பில் மேல் நோக்கி கோபுரம் போல் அன்னளவாக 33 மீட்டர் உயர்ந்துள்ளது. கூரையின் உச்சி பகுதியில் பித்தளையிலான அனுராதபுர நெஸ்தோரியன் சிலுவை அமைப்பு காணப்படுகிறது. ஆலயத்தின் சாளரங்கள் நீள் சதுர அமைப்பைக் கொண்டதாகவும் அதற்கு மேலாகத் தாமரை வடிவ மலர் இதழ்களும், மலரின் நடுப்பகுதியில் சிலுவையும் வெண்ணிறத்தில் காணப்படுகின்றமை ஆலயத்தின் சாளரங்களைச் சிறப்பித்துக் காட்டுகின்றன.



(உரு 1)



(உரு 2)

ஆலயத்தின் சுவர் அமைப்பானது இருமாடிக் கட்டடத்தினை போன்று உயரமானதாகக் காட்சியளிக்கின்றது. கட்டடத்தின் கீழத் தளமானது எட்டு நுழைவாயில்களைக் கொண்டு இருப்பதோடு, பொதுவாகப் பிரதான நுழைவாயில் அமையவேண்டிய பகுதியில் சற்று வெளித்தள்ளிய அமைப்பில் திருமுழுக்கு தொட்டி வைக்கப்பட்டுள்ளது. (உரு 3) எனவே இங்கு ஆலயத்தின் பிரதான நுழைவாயிலானது பீடத்திற்குச் சரி எதிரே அமையப்பெறவில்லை. சுதேசக்கலை மற்றும் பாரம்பரிய நடைமுறை என்பவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டு ஆலயத்தின் வழிபாடுகளுக்கென அதன் பக்கக் கதவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிங்கள பௌத்த பாரம்பரியத்தில் அரசரை நேர் எதிரே மக்கள் சந்திப்பது வழக்கம் இல்லை என்பதால் அம்மரபுக்கு அமைவாக ஆலயத்தில் மையப்பகுதியிலுள்ள கிறிஸ்து அரசரை நேர் எதிரே சந்திக்காது பக்கச் சுவர் கதவுகளையே பயன்படுத்தும் வகையில் ஆலயத்தின் கட்டட அமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பொதுவாகக் கிறிஸ்தவ ஆலயங்களின் பிரதான நுழைவாயில் பீடத்திற்கு நேர் எதிரே காணப்படுவது

வழக்கம் என்பதும் எடுத்துரைக்கப்படவேண்டியதே. ஆலயத்தின் புற அமைப்பானது உரோமைய இலத்தீன் சிலுவை அமைப்பைக் கொண்டுள்ளது. (உரு 4)



(உரு 3)



(உரு 4)

ஆலயத்தில் பயன்படுத்தப்படும் வழிபாட்டுப் பாவனை பொருட்களிலும் சுதேசக் கலையின் செல்வாக்கை அடையாளம் காணலாம். இவை அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கண்டியக் கால கலையம்சங்களைப் போன்ற பிரதிபலிப்புடன் காணப்படுகின்றன. குறிப்பாகத் திருவிழா பவணிகளின்போது பயன்படுத்தப்படும் பாரம்பரிய குடை இந்த ஆலயத்தில் காணப்படுகின்றது. இதனை சிங்களத்தில் '*சேசத*' (සේසත) என்றழைப்பர். (உரு 5) '*சேசத*' என்பது மரக்கம்பத்தில் பொருத்தப்பட்ட ஒரு வட்ட வடிவிலான அலங்கார விசிறி அமைப்புடைய பாரம்பரிய அடையாளச் சின்னமாகும். அரசகுடி மக்களுக்கான சூரியக் கவசமாக விளங்கியமை சேசதவின் பாரம்பரிய சமய சார்பற்ற நோக்கமாகும். ஆயினும் இது கலாசார விழாக்களில் பக்தியின் அடையாளமாகவும் பயன்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள சில கிறிஸ்தவ ஆலயங்களில் தேசிய கலாசார மரபுகளை இணைக்கும் வகையில் இதன் பயன்பாடு அமையப்பெற்றுள்ளது. '*சேசத'வின்* பாவனையை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இரு ஆலயங்களிலும் காணக்கூடியதாயுள்ளது. மேலும் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் காணப்படும் பக்க சிற்றாலயங்களில் ஒன்றான புனித தோமாவுக்கு அர்பணிக்கப்பட்டுள்ள ஆலய மையப்பகுதியில் அமைந்துள்ள தோமாவின் சொரூபம் வைக்கப்பட்டுள்ள சொரூபக் கூட்டின் அமைப்பும் தேசிய கலைபாணியை உள்வாங்கியுள்ளது. (உரு 6)

ISSN (Print): 2550 - 2573

மேலும் ஆலயத்தின் நுழைவாயிலில் சந்திரவட்டக்கல் காணப்படுகிறது. தூக்கு விளக்குகளின் காட்சியையும் ஆலயத்தில் அவதானிக்க முடிகிறது. (உரு 7) தூக்கு வெண்கல விளக்குகள் இந்து ஆலய கட்டடப் பாரம்பரியத்திலும் பௌத்த விகாரைகளிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான கலைப்பாணியின் செல்வாக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் காணப்பட்டாலும் அவை இந்து ஆலயத்திலுள்ள திராவிட கலைப்பணியையோ அல்லது பௌத்த கலைப்பணியையே முழுமையாக உள்வாங்கியுள்ளது எனக் கூற முடியாது. காரணம் ஒளியேற்றல் என்பது கிறிஸ்தவத்திலும் பிரதான இடம் வகிக்கும் பாரம்பரிய நடைமுறையாகும். எனவே குறித்த ஆலயத்தில் காணப்படும் தூக்கு விளக்குகள் இலங்கைப் பாரம்பரிய கலையம்சங்களின் சாயல் தன்மையைக் கொண்டுள்ளது எனக் கருதலாம்.



(உரு 5)



(உரு 6)

மேலும் நளினி ஜெயசூரிய என்ற பெண் ஓவியரினால் ஆலய சுவரில் வரையப்பட்டுள்ள ஓவியத்தில் இயேசுவும் மக்கள் கூட்டத்தினரும் சிங்கள சுதேச ஆடைகளுடன் காடசியளிப்பதையும் ஓவியத்தின் பின்னணி இலங்கைச் சூழலை பிரதிபலிப்பதையும் அவதானிக்க கூடியதாயுள்ளது. (உரு 8) இவ்வாறாக இலங்கை வாழ் மக்களின் அடையாளங்களை தமதாக்கி மறைசார்ந்த கருத்துக்களையும் விழுமியங்களையும் கிறிஸ்தவம் சுதேச பண்பாட்டு அம்சங்களினூடாக வழங்கியுள்ளது.



(உரு 7)



(உரு 8)

**கண்டி திரித்துவக் கல்லூரி சிற்றாலயம்**

1918ஆம் ஆண்டில் திரித்துவக் கல்லூரியின் ஏழாவது அதிபராக இருந்த அலெக்சாண்டர் கோடன் பிரோசர் (1873-1962) கல்லூரிக்கான சிற்றாலயத்தை நிர்மாணிப்பதற்கான திட்டத்தைத் தொடங்கினார். 1910இல் பள்ளியில் பணியாற்றிய கட்டடக் கலைஞராக விளங்கிய பிரதி அதிபரான லூயிஸ் ஜான் கேஸ்டரின் (1879 -1939) துணையுடன் சிற்றாலயத்திற்கான திட்டங்களை தயாரித்தார். 1922ஆம் ஆண்டு கல்லூரியின் 50வது ஆண்டு விழாவின் போது சிற்றாலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. 1923ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொடக்கப்பட்ட இந்த தேவாலயத்தின் கட்டுமானப்பணி முடிவடைய 12 ஆண்டுகளுக்கு அதிகம் எடுத்தது. குறித்த சிற்றாலயக் கட்டுமானப்பணியின் போது கிட்டத்தட்ட நூறு கட்டுமானப் பணியாளர்கள் கடமையாற்றியுள்ளனர். சிற்றாலயமானது 1935ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (உரு 9)

சிற்றாலயத்தின் உட்புற அமைப்பு லூயிஸ் ஜான் கேஸ்டரினால் சுதேச சிங்கள கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்டுள்ளது. இவ் ஆலயம் கண்டி இராச்சியத்தின் மகுல் மடுவா கொண்டாட்ட மண்டபம் அமைப்பு (உரு 10) மற்றும் எம்பக்க ஆலயத்தின் கலையம்சங்கள் என்பவற்றின் சாயலைக் கொண்டுள்ளது.




(உரு 9)




(உரு 10)

கண்டி தலகா மாளிகையிலுள்ள மகுல் மடுவ தூண்கள் (உரு 11) மரத்தாலனவை ஆயினும் சிற்றாலயத்தில் கல் தூண்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அக் காலத்தின் பிரபல செதுக்குக் வேலைகளை மேற்கொண்ட கே.எஸ். சிறிபாலா என்பவரின் மேற்பார்வையில் குறித்த பணி இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிற்றாலயத்தில் 54 தூண்கள் காணப்படுவதுடன், இவை ஒவ்வொன்றும் மூன்று மெட்ரிக் டொன் எடையுள்ள கிரணயிற் கற்களினாலான தூண்களாகும். இத் தூண்களில் செதுக்கு வேலைப்பாடுகள் நிறைவுற்ற பின்னர் ஒரு சோடி யானைகளின் துணையுடன் தள்ளுவண்டியில் வைத்துக் குறித்த கட்டுமானப் பணி இடம்பெறும் இடத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்னும் விடயத்தை அருட்பணியாளர் டானியல் செல்டன் எமசன் என்வர் குறிப்பிட்டார். இத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கு வேலைபாடுகள் தூணுக்கு தூண் வேறுபட்ட தனித்துவமானவையாகக் காணப்படுகின்றன. (உரு 12) ஒவ்வொரு தூணின் பொதிகைப் பகுதியிலும் மலர் அலங்காரம் பொருந்தியதாகக் காணப்பட்டாலும் அவற்றின் மலர் அழங்காரங்கள் தூணுக்கு தூண் வேறுபாட்டுள்ளது. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் தனித்துவமானவர்கள் என்னும் உயரிய சிந்தனையை இது பிரதிபலிப்பதாக அருட்பணியாளர் டானியல் செல்டன் எமசன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வகையிலான தூண் அமைப்புக்களை இந்து ஆலய கட்டுமானங்களிலும் காணப்படுகின்றன. எனவே திராவிட கலைப்பாணியின் சாயலும் சிற்றாலயத் தூண்களிலும் காணப்படுகின்றது என அனுமானிக்கலாம்.



(உரு 11)




(உரு 12)

திரித்துவக் கல்லூரி சிற்றாலயமானது பக்கச் சுவர்கள் அற்ற திறந்த வெளி ஆலயமாகவே காணப்படுகிறது. இதன் கூரையமைப்பு உயரமானதாகக் காட்சியளிக்கின்றது. திரித்துவ கல்லூரி சிற்றாலயத்தின் புற தோற்றம் பாரம்பரிய முறைப்படி தலதா மாளிகையின் கட்டட வடிவமைப்பை ஒத்ததாகக் காணப்படுகின்றது. ஆலயத்தின் கூரை பாரம்பரிய கண்டி பாணியிலான இரட்டை அடுக்கு கூரையின் விளிம்புப் பகுதியில் தலதா மாளிகையில் காணப்படும் அலங்காரத் தன்மையுடன் காட்சியளிக்கின்றது. சிற்றாயத்திலுள்ள செதுக்கு வேலைப்பாடுகள் தலதாமாளிகையை ஒத்ததாகக் காணப்பட்டாலும் தலதாமாளிகையிலுள்ளதை விட நுட்பமான வடிவமைப்புடனும், தெளிவானதாகவும், தரமானதாகவும் காணப்படுகின்றது. (உரு 13, 14) இவற்றை தலதாமாளிகையில் செதுக்கல் வேலைகளை மேற்கொண்ட நவரத்ன குடும்பத்தாரே மேற்கொண்டுள்ளனர் என அருட்பணியாளர் டானியல் செல்டன் எமசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




(உரு 13)




(உரு 14)

சிற்றாலயத்தை அலங்கரிக்கும் ஓவியங்களும் சுதேச கலைநுட்பங்களுடன் அமையப்பெற்றுள்ளன. திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவரான டேவிட் பெயின்டன் சிற்றாலயத்தில் நான்கு ஓவியங்களை வரைந்துள்ளார். ஆலயத்தின் சுவரில் வரையப்பட்ட குறித்த ஓவியங்கள் விவிலிய நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன. ஆலயத்தின் பலிபீடப் பகுதிக்குப் பின் சுவரில் வரையப்பட்டுள்ள ஓவியம் சுதேச கலைநுட்பங்களுடன் அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக அதில் "சிலுவையில் அறையப்பட்ட நிலையில் காணப்படும் இயேசுவை" (மத்.27:32-44, மாற்.15:21-32, லூக்.23:26-43, யோவா.19:17-27) வரைந்துள்ளார். இயேசுவின் இரு பக்கங்களிலும் இரு கள்வர்களின் உருக்கள் காட்சியளிக்கின்றன. இயேசுவைத் தாடி இல்லாத இலங்கையைச் சார்ந்த ஒரு சுதேச நபராக வரைந்துள்ளதுடன், அவருடைய ஆடையமைப்பும் சுதேச பாணியில் காணப்படுகின்றது. ஓவியத்திலுள்ள இரு கள்வர்களில் ஒருவர் குறித்த பாடசாலையில் கற்ற பழைய மாணவராகக் கருதப்படுகின்றார் எனவும் அருட்பணியாளர் டானியல் செல்டன் எமசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஓவியத்தின் பின்னணியாகத் திருகோணமலையிலுள்ள ஒரு இராணுவமுகாம் அமையப்பெற்ற இடம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (உரு 15)

மேலும் சிற்றாலயத்தின் இடதுபக்க ஆலயப் பகுதியின் சுவரில் "செபதேயுவின் மக்கள் சார்பில் வேண்டுகோள்" (மத்.20:20-28, மாற்.10:35-45) என்னும் விடயத்தை உள்ளடக்கும் இறுதித் தீர்ப்பு நாளில் இயேசுவின் வலப்புறமும் இடப்புறமும் தனது இரு மகன்களும் இருக்க வேண்டும் என்ற தாயின் விருப்பத்தை இயேசுவிடம் எடுத்துரைக்கும் வேண்டுகோளை மையப்படுத்தும் தத்ரூபமான ஓவியம் தேசிய பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உரு 16) ஓவியத்தில் இடம்பெறும் பின்னணி இலங்கையில் காணப்படும் இயற்கை அழகு நிறைந்த இடமொன்றினை காட்டி நிற்கின்றது. அதில் இடம்பெறும் நபர்களின் ஆடையமைப்புக்கள் சிங்கள கலாசாரத்தை ஒத்தும் அமையப்பெற்றுள்ளன. யூத பின்னணி போன்று ஆண்கள் நீளமான முடி, தாடியுடனும் பெண்கள் தலைக்கு முக்காடு அணியும் வகையிலும் இல்லாது இலங்கைச் சுதேசிகளைப் போன்று தேசிய உணர்வுடன் ஓவியத்திலுள்ள மனித உருக்கள் காட்சியளிக்கின்றன.




(உரு 15)



(உரு 16)

மனிதநேயத்தினையே முதன்மைப்படுத்தி வரையப்பட்டுள்ள "இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுதல்" (யோவா.13-1-17) என்னும் ஓவியத்தில் பின்னணியாக அமைவது, குறித்த சிற்றாலய கட்டுமான பணியின் போது வேலையாட்கள் தங்கி இருப்பதற்கு அமைக்கப்பட்ட குடிசையாகும். (உரு 17) ஓவியத்தில் இடது பக்கத்தில் இரு கைகளையும் ஒன்றாக இணைத்தபடி நிற்பவர் கல்லூரியில் பணியாற்றிய பிரதி அதிபர் எனவும், ஓவியத்தின் வலது புறம் மஞ்சள் நிற ஆடையுடன் நிற்பவர் கல்லூரியின் பேருந்து நடத்துநர் எனவும் சீடர்களின் பாதங்களைக் கழுவும் இயேசுவைக் குறிக்கும் மனித உருவாகக் காட்சிப்படுத்தப்படுபவர் குறித்த ஓவியத்தை வரைந்த ஓவியர் டேவிட் பெயின்டன் என்றும் அருட்பணி. டானியல் செல்டன் எமசன அவர்களுடனான நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவலின்படி அறியமுடிந்தது. அயலான் யார் என்பது குறித்துத் தெளிவுபடுத்தும் வகையில் "நல்ல சமாரியன் உவமையை" (லூக்.10:25-37) எடுத்துரைக்கும் ஓவியமும் வரையப்பட்டுள்ளது. பாதையில் விழுந்து கிடக்கும் சமாரியனைக் கடந்து பலர் செல்கின்றனர். அதில் குருவானவர் ஒருவரையும் ஓவியர் காட்சிப்படுத்தியுள்ளார். குறித்த குரு ஓவியம் வரையப்பட்ட காலத்தில் திரித்துவக் கல்லூரி சிற்றாலயத்திற்குப் பொறுப்பாக இருந்த குருவானவர் என்பதையும் அருட்பணி. டானியல் செல்டன் எமசன் அவர்கள் தெரிவித்தார்.


(உரு 17)


(உரு 18)

சிற்றாலயத்தில் வரையப்பட்ட இரு ஓவியங்களும் (உரு 17, 18) இன, சமய, மொழி பாகுபாடுகளைக் கடந்து, சமத்துவ உணர்வை வெளிப்படுத்தும் வகையில் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாகப் பாகுபாடு அற்ற மாணவ சமூகத்தைத் திரித்துவக் கல்லூரி கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும் திரித்துவக் கல்லூரியில் பணியாற்றியவர்களைப் பதவி வேறுபாடுகள் இன்றி சமநிலையில் நோக்கும் மனப்பக்குவத்தையும் ஓவியங்களில் காணலாம்.

**முடிவுரை**

இலங்கையிலுள்ள ஆலயங்களில் தேசியக் கலைபாரம்பரியத்தின் பிரதிபலிப்புக்கள் காணப்பட்டாலும் அதன் தூயத் தன்மையைக் கிறிஸ்தவ ஆலயங்களில் காண்பது கடினம். குறிப்பாக அவற்றில் ஆங்காங்கே ஐரோப்பிய கலையம்ஙகளின் செல்வாக்குக் காணப்படுவதையும் அடையாளம் காண முடியும். ஆய்வானது கிறிஸ்தவ ஆலயங்களின் தேசியக் கலைபாரம்பரியத்தின் செல்வாக்கை மையப்படுத்திக் காணப்பட்டாலும் அதன் ஒப்பீட்டுப் பார்வையானது தேசியக்கலை வடிவங்கள் குறித்த விளக்கத்தையும் கொண்டுள்ளது. கிறிஸ்தவ வாழ்வு அனைவருக்கும், அனைத்துலக மக்களுக்கும் பொதுவானது என்பதையும் கலையின் வெளிப்படு எடுத்துரைப்பதையும் காணலாம். அந்த வகையில் இலங்கையின் காலனித்துவ ஆட்சியைத் தொடர்ந்து சுதேச மயமாதலானது அங்கிலிக்கன் ஆலய கட்டடக்கலையிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை ஆய்வுப் பதிவு செய்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

கந்தையா நவரத்தினம், (2007). *இலங்கையிற் கலை வளர்ச்சி*. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

ஞானமுத்து பிலேந்திரன், (2009). *தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்*. யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.

மேரி வினிபிரிடா, எஸ். (2023). *திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சிற்ப, கட்டடக்கலைகள்.* திருநெல்வேலி: நல்லாயன் நிலையம்.

மோசேஸ், எஸ். (2007). *தொழில்நுட்ப கலைகள் அறிமுக விளக்கம்*. கொழும்பு: கிருஷி வெளியீடு.

Consecrated. (1960). *The Cathedral Church of Christ the King*. Sri Lanka: Kurunagala.

Jayasinghe Sagara. (2015). *Identity Crisis of Post-Colonial Church Architecture in Sri Lanka*. Tailand: Proceedings Book ARCASIA Design Analysis Forum.

Jeffrey Abayasekera. (27October 2022). “Bishop Lakdasa De Mel: Called for justice and uplift ofpoor”, *Sundy Observer Magazine*, Sri Lanka: The Associated Newspapers of Ceylon Ltd.

Wingate, Andrew; Ward, Kevin; Pemberton, Carrie; Sitshebo, Wilson, eds.(1998). *Anglicanism: A Global Communion*. New York: Church Publishing.

https://www.worldgenweb.org/lkawgw/sesath.htm?utm_source=chatgpt.com

https://karava.org/royal_symbols/white_umbrella?utm_source=chatgpt.com

**நேர்காணல்கள்**

அருட்பணி. டானியல் செல்டன் எமசன், ஆன்மீகக் குரு - திரித்துவக் கல்லூரி சிற்றாலயம், கண்டி, *04.10.2024*, *19.09.2025.*

இரஞ்சித் விக்டர், பொதுநிலை பணியாளர் - கிறிஸ்து அரசர் பேராலயம், குருணாகலை, *04.10.2024*

அருட்பணி. சன்ஜய கமகே, பங்குத் தந்தை - கிறிஸ்து அரசர் பேராலயம், குருணாகலை, *19.09.2025.*